# பத்திரிக்கை செய்தி

## கூட்டுப்பட்டாவில் இருந்து தனிப்பட்டா வழங்க ரூ.7,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய கிராம நிர்வாக அலுவலர் மற்றும் தனிநபர் கைது

புகார்தாரர் திரு.புகழேந்தி, டிவி மெக்கானிக், ஊரப்பாக்கம், செங்கல்பட்டு மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தன்னுடைய பூர்வீக சொத்தில் பாகப்பிரிவினை செய்து தன்னுடைய பெயருக்கு தனிப்பட்டா கேட்டு செங்கல்பட்டு அணைக்கட்டு கிராமத்தில் உள்ள இ-சேவை மையம் மூலமாக தண்டரை கிராம நிர்வாக அலுலகத்திற்கு மனுச் செய்திருந்தார். திரு.சுதாகர், கிராம நிர்வாக அலுவலர், தண்டரை கிராம நிர்வாக அலுவலகம், செங்கல்பட்டு மாவட்டம் அவர்கள் புகார்தாரரின் மனுவை தக்க மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனில் தனக்கு ரூ.7,000/- லஞ்சமாக தர வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சென்னை சிறப்பு புலனாய்வு பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 27.09.2024, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.சுதாகர், கிராம நிர்வாக அலுவலர், அவர்களின் உத்தரவின்படி திரு.பழனி, தனி நபர், அவர்கள் லஞ்ச பணம் ரூ.7,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

# **PRESS NOTE**

## **VILLAGE ADMINISTRATIVE OFFICER AND PRIVATE INDIVIDUAL ARRESTED FOR DEMAND AND ACCEPTANCE OF BRIBE RS.7,000/- FOR ISSUING INDIVIDUAL PATTA**

The complainant Tr.Puglanthi, TV Mechanic, is residing at Urapakkam, Chengalpattu District. The complainant had applied for Individual Patta at Thandarai Village Administrative Office, Chengalpattu, through E-Sevai Maiyam, Anaikattu Village, Chengalpattu District. Tr.Sudhakar, Village Administrative Officer, Thandarai Village, Chengalpattu District, demanded Rs.7,000/- as bribe for processing the complainant petition. Unwilling to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Special Investigation Cell, Chennai and gave complaint. In this connection a case was registered and a trap was organized today (27.09.2024). During trap proceedings, on the instructions of Tr.Sudhakar, Village Administrative Officer, Tr.Palani, Private individual received the bribe amount of Rs.7,000/- from the complainant. Both accused were arrested.